**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No. 19 Of 2013**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | DW1 |
| **Name of the Witness** | **:** | பெருமாள் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 27th day of October, 2025.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் B.Sc படித்துள்ளேன். 1984 ல் என் பட்டப்படிப்பு முடித்தேன். என் தகப்பனார் அந்த வருடம் தான் காலமானார். அதனால் பட்டப்படிப்பு முடிக்க இயலவில்லை. அதன்பிறகு வேறு படிப்பு எதுவும் படிக்கவில்லை. வழக்கு சொத்துக்களில் என் தகப்பனார் வாங்கிய சொத்தும் உள்ளது. பூர்வீக சொத்துக்களும் உள்ளது என்றால் சரியல்ல. என் சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்துக்களும், என் தகப்பனார் வருமானத்தில் வாங்கிய சொத்துக்களும் உள்ளது. நான் படிப்பு முடித்து அரசு அல்லது தனியார் பணிக்கு செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு விவசாயம் தான் தொழில். அதற்கு முன்பாக பூர்வீகத்தில் சொத்தில் தான் விவசாயம் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் 65/3 சர்வே எண் உள்ள சொத்து எம்பெருமான் என்பவரிடம் கிரையம் ஒப்பந்தம் போட்டு அவர் வேறு ஒருவருக்கு விற்பனை செய்து விட்டதால் அதற்கான வழக்கு நிலுவையில் உள்ளது. சர்வே எண் 65/4 மாசிலமணி மற்றும் அஞ்சலை என்பவரிடம் இருந்து நானும் எனது தம்பிகள்

பரமசிவம், லோகநாதன் ஆகியோர்கள் வாங்கினோம். சர்வே எண் 65/5 என்ற சொத்தும் நான் கிரையம் வாங்கியது தான். சர்வே எண். 77/11 நான் கிரையம் வாங்கியது. சர்வே எண். 77/13 மற்றும் 78/2 ஆகிய சொத்துக்கள் ஒன்றாக உள்ளது. அதை ஞானசேகர் என்பவரிடம் இருந்து நான் கிரையம் வாங்கினேன். மேற்படி சொத்துக்கள் எனது பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தில் இருந்து வாங்கியது என்றால் சரியல்ல. எனது மகன்கள் மருத்துவர் மற்றும் Geologist ஆகும் எனவே அவர்கள் வருமானத்தில் இருந்து மேற்படி சொத்துக்கள் வாங்கினேன். நான் அவ்வாறு வாங்கியதை காண்பிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா வட்டி தொழில் செய்தார் என்றால் சரியல்ல. அவர் எந்த வேலைக்கு செல்லவில்லை. எனக்கு 1989 ல் திருமணம் ஆனது. எனது திருமணத்தை எனது தாயார் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. எனது உடன்பிறந்தவர்களுக்கு எனது தாயார் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. நான் தான் செய்து வைத்தேன். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் எடுத்து வைத்திருந்த நகை மற்றும் பணத்தை கொண்டு எங்களது திருமணம் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது தந்தையார் உயிருடன் இருக்கும் போதே எங்களுக்கு பாகம் கொடுப்பது குறித்து பேசி வைத்திருந்தார் என்றால் என் அப்பா இறக்கும் சமயத்தில் எனது தம்பிகள் மற்றும் தங்கைகள் அனைவரும் சிறுவயதினராகும். நான் தான் அவர்களை படிக்க வைத்தேன். அனைவரும் 8 ஆம் வகுப்பு அல்லது 10 ஆம் வகுப்பு படித்து இருப்பார்கள். அவர்கள் ஊரில் அரசு பள்ளியில் படித்தார்கள் என்றால் சரிதான். வாதி சிவகாமசுந்தரிக்கு 2

ஏக்கர் நிலமும், மோட்டார் பம்பு செட் விற்பனை செய்து திருமணம் செய்து வைத்தேன். அவ்வாறு நான் விற்பனை செய்த்ததை காண்பிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த சங்கதியை பொய்யாக சொல்லும் காரணத்தினால் தான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சீதனப்பொருட்களை கடையில் வாங்கியதற்கு பில்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் மற்றவர்களுக்கும் எனது தாயார் தான் திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் கணவர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு சிறையில் இருப்பதால் வாதிக்கு ரூ.2,50,000/- பணமாக கொடுத்தேன் என்பதை காண்பிக்க ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அந்த தொகையை கடன் வாங்கியும் கொடுத்தேன், கையில் இருந்ததை வைத்தும் கொடுத்தேன். நான் கடன் வாங்கியதை காண்பிக்க ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.08.2011 அன்று நானும் எனது தம்பியும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம். வாதி என்னிடம் பணம் வாங்கிக்கொண்ட காரணத்தினாலும் சீதனமாக அவருக்கு பொருட்கள் கொடுத்து திருமணம் செய்து வைத்த காரணத்தினாலும் அவருக்கு எந்த பாகமும் இல்லை என்று தான் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கும் என் தம்பிக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். **காண்பிக்க பாகப்பிரிவினை பத்திரம் நகல் நானும் எனது தம்பியும் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அது வாதசாஆ 5 ஆகும்.** இந்த

பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது தாயார் மற்றும் எனது சகோதரிகள் பார்ட்டியாக இல்லை என்றால் சரிதான் எனவே மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ஏன் எனது தாயார் மற்றும் சகோதரிகளை பத்திரத்தில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு சீர்வரிசை கொடுத்தாகவோ அவர்கள் பாகத்தை விட்டு கொடுத்தாகவோ எந்த விவரங்களும் பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். நான் அது போல் சீர்வரிசை செய்து திருமணம் எதுவும் செய்துக்கொடுக்கவில்லை என்றாலும் அதன் காரணமாகத் தான் மேற்படி விவரங்களை பாகப்பிரிவினை பத்திரத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வாதசாஆ 5 பாகப்பிரிவினை பத்திரத்தில் உள்ள சொத்து விவரங்கள் தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் தான் வாதசாஆ 5 பாகப்பிரிவினை பத்திரத்தில் அவற்றை பொதுசொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. ஜெகதாம்பாள் எனது பெரியம்மா, எனது அப்பாவின் முதல்தாரம். பிவாதசாஆ 1 உயில் ஜெகதாம்பாள் என் பெயருக்கு எழுதிக்கொடுத்தாகும். உயில் எழுதிய 16 நாட்களில் எனது பெரியம்மா ஜெகதாம்பாள் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். உயில் எழுதிய சமயத்தில் எனது பெரியம்மா நல்ல உடல்நிலையில் தான் இருந்தார். அவருக்கு அப்போது வயது 95 ஆகும். உயில் பண்ருட்டி காமராஜ் நகரில் உள்ள வழக்கறிஞர் சாந்தரமூர்த்தி நோட்டரி அலுவலகத்தில் எழுதப்பட்டது என்றால் சரிதான். நான் தான் முன் நின்று உயிலை எழுதினேன் என்றால் சரியல்ல. நான்

போகவில்லை. உயில் எனது பெரியம்மா இறந்த பிறகு தான் என் கைக்கு வந்தது. பரசுராமன் உயில் என்னிடம் ஒப்படைத்தார். முதல் சாட்சி பாலமுருகன் எனது மனைவியின் அண்ணன் என்றால் சரிதான். பரசுராமன் எனக்கு வேண்டப்பட்டவர் கிடையாது., அவர் மூன்றாம் நபர் ஆகும். எனது பெரியம்மாவை கடைசி வரை நான் தான் பார்த்துக்கொண்டதாக உயிலில் சொல்லப்பட்டுள்ளதால் உயில் எழுதிய விவரம் எனக்கு முதலிலேயே தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள விவரங்கள் தான் பிவாதசாஆ 1 உயிலில் அப்படியே காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடன் இருந்த பெரியம்மாவை உயில் எழுத அழைத்துக்கொண்டு சென்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பெரியம்மா ஜெகதாம்பாள் இந்த வழக்கில் பதில்வாதுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் யாரும் பதில்வாதுரை தாக்கல் செய்து வழக்காட வில்லை என்றால் சரியல்ல. வழக்கை நடத்துகிறார்கள். எங்கள் ஊர் சொத்துக்களுக்கு சார்பதிவாளர் அலுவலகம் காடாம்பூலியுர் என்றால் சரிதான். காடாம்பூலியுர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யாமல் பண்ருட்டியில் உள்ள நோட்டரியிடம் உயில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் அது ஏன் என்று எனக்கு தெரியாது. நான் எனக்கு வேண்டப்பட்ட நபர்களை வைத்துக்கொண்டு பிவாதசாஆ 1 உயிலை எனக்கு சாதகமாக ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. ஜெகதாம்பாள் உயிலில் உள்ள விவரங்கள் எதுவும் தெரியாமல் கையொப்பம் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்ற காரணத்தினால் அனைத்து சொத்துக்களும் பிவாதசாஆ 1

உயிலில் அப்படியே காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி தரப்பில் எனக்கும் என் சகோதரர்களுக்கு தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பதில் அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்ததாக சொல்லும் பதில் அறிவிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிவாதசாஆ 4 மற்றும் 7 கிரையப்பத்திரம் நானும் எனது சகோதரர்கள் சேர்ந்து வாங்கியது என்றால் சரிதான். பொதுகுடும்பத்தில்இருந்து வந்த வருமானத்தில் வாங்கிய சொத்து என்பதால் தான் நானும் என் சகோதரர்களும் சேர்ந்து வாங்கினோம் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொது சொத்துக்களாக வாதியும் சேர்த்து தான் கூட்டுஅனுபவத்தில் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனவே வாதிக்கு 1/5 பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதி விடுதலை பத்திரம் எதுவும் தனியாக எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore*